# குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றம், கரூர்.

**முன்னிலை:-** திரு.எஸ்.பி. பரத்குமார் எம்.பி.ஏ., எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.

தமிழ் விசுவாவசு வருடம், மாசி மாதம் 25 ஆம் நாள்,
2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் நாள், திங்கள்கிழமை,

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 567/2025**

| | | | |
|---|---|---|---|
| 1) | CNR Number | | **TNKR**02-012158-2023 |
| 2) | குற்றமுறையிடுபவர் மற்றும் எதிரி பெயர், விலாசம் | | தமிழ்நாடு அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>தாந்தோணிமலை காவல் நிலையம்,<br>கா.நி. குற்ற எண்.326/2022.<br><br>எதிரியின் மீது இ.த.ச. 294(b), 379, 427, 506(ii) ஆவது பிரிவுகளின் கீழ்.<br><br>// எதிரி //<br>பாலசுப்பிரமணி(40/2022),<br>த/பெ.கண்ணையன்,<br>T. செல்லாண்டிபாளையம்,<br>தோரணக்கல்பட்டி,<br>கரூர் மாவட்டம். |
| 3) | குற்றம் நடந்த நாள் | | 29.07.2022 |
| 4) | முறையிட்ட நாள் | | 29.07.2022 |
| 5) | முதல் தகவல் அறிக்கை பெறப்பட்ட நாள் | | 29.07.2022 |
| 6) | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | | 29.07.2022 |
| 7) | எதிரி முதன் முதலாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்ட நாள் | | 29.07.2022 |
| 8) | எதிரி பிணையில் விடப்பட்ட நாள் | | 17.08.2022 |
| 9) | எதிரி காவலில் இருந்த நாட்கள் | | 29.07.2022 to 17.08.2022 |
| 10) | குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | | 26.05.2025 |
| 11) | அரசு தரப்பு வழக்கறிஞர் | | திரு. தண்டபாணி, |

<table>
<tr><td></td><td>நிலை-2,கரூர் அவர்களின் பெயர்</td><td></td><td></td></tr>
<tr><td>12)</td><td>எதிரி தரப்பு வழக்கறிஞர் பெயர்</td><td></td><td>திரு. கார்த்திகேயன்,</td></tr>
<tr><td>13)</td><td>எதிரியிடம் கு.வி.முச. 240-பிரிவின்படி கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td></td><td>26.02.2026</td></tr>
<tr><td>14)</td><td>நீதிமன்றத்தால் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு</td><td></td><td>எதிரியின் மீது இ.த.ச. 294(b), 379, 427, 506(ii) ஆவது பிரிவுகளின் கீழ்.</td></tr>
<tr><td>15)</td><td>எதிரியின் பதில்</td><td></td><td>எதிரி குற்றச்சாட்டை மறுத்தார்.</td></tr>
<tr><td>16)</td><td>சாட்சிகளை முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td></td><td><table><tr><td></td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr><tr><td>அ.சா.1.</td><td>02.03.2026</td><td>02.03.2026</td></tr><tr><td>அ.சா.2</td><td>02.03.2026</td><td>02.03.2026</td></tr></table></td></tr>
<tr><td>17)</td><td>அனைத்து பலதரப்பட்ட மனுக்களும் கோப்பிற்கு எடுக்கப் பட்ட நாள் -அவற்றிற்கான முடிவு, (மேல் நீதிமன்றங்களில் சேலஞ்ச் மனுக்கள் உட்பட) (routine மனுக்கள் கு.வி.மு ச. 317 போன்றவற்றை தவிர்த்து)</td><td></td><td>இல்லை</td></tr>
<tr><td>18)</td><td>எதிரியை கு.வி.மு.ச. 313(1) (ஆ) பிரிவின்படி வினவப் பட்ட நாள்</td><td></td><td>05.03.2026</td></tr>
<tr><td>19)</td><td>தலை மறைவு எதிரிகள் யாராவது இருப்பின் அவர் ஆஜரான நாள், ஆஜர் படுத்தப்பட்ட நாள் போன்ற விவரங்கள்</td><td></td><td>ஒருவருமில்லை.</td></tr>
<tr><td>20)</td><td>உயர் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள stay மனு மற்றும் அதில் பிறப்பிக்கப்பட்ட முடிவு</td><td></td><td>ஏதுமில்லை.</td></tr>
<tr><td>21)</td><td>வழக்கில் விசாரணைக்காக</td><td></td><td>04.08.2025</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | உத்தரவிடப்பட்ட நாள் | | |
| 22) | விசாரணை முடிவுற்ற நாள் | | 05.03.2026 |
| 23) | நடுவரின் தீர்மானம் | | எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை. |
| 24) | முடிவு | | எதிரி குற்றம் சாட்டப்பட்டபடி குற்றவாளி இல்லை என முடிவு செய்யப்பட்டது. |
| 25) | எதிரிக்கு, இத்தீர்ப்பாணையின் இலவச நகல் வழங்கப்பட்ட நாள் | | அவ்வாறான சந்தர்ப்பம் எழவில்லை. |
| 26) | தீர்ப்பு நாள் | | 09.03.2026 |

**<u>தீர்ப்புரை</u>**

1) கடந்த 29.07.2022ம் தேதி அதிகாலை சுமார் 01.30 மணிக்கு இவ்வழக்கின் புகார்தாரர் மஞ்சு என்பவரது வீட்டிற்கு வெளியே இவ்வழக்கின் எதிரி பாலசுப்பிரமணி என்பவர் TN 47 AQ 0472 என்ற பதிவெண் கொண்ட HYUNDAI VERNA வெள்ளைநிற காரில் வந்து காரை நிறுத்திவிட்டு இறங்கி காருக்குள் இருந்து அருவாளை எடுத்து வீட்டின் காம்பவுண்ட் சுவரில் பொருத்தப்பட்டுள்ள சுமார் ரூ.12,000/- மதிப்புள்ள 3 டும் லைட்டுகளை அருவாளால் அடித்து உடைத்து திருடி காருக்குள் வைத்துக்கொண்டு புறப்பட்டபோது அதைப் பார்த்த சாட்சிகளான சாந்தி மற்றும் ரவிக்குமார் ஆகியோர் வந்து இருவரும் காரை குறுக்கே நின்று தேக்கிய பொழுது எதிரி பாலசுப்பிரமணி காரின் ஜன்னலை இறக்கி அருவாளைக் காட்டி வழி விடாவிட்டால் காரை ஏற்றி கொன்றுவிடுவதாக கொலைமிரட்டல் செய்தும், வக்கீல் மாரப்பன் பார்கவுன்சில் மெம்பர் என்றால் பெரிய ஆளா என்றும் புண்டமகனே, என்னைக்கா இருந்தாலும் அவனை வெட்டிக் கொல்லாமல் விடமாட்டேன் என்று அருவாளைக் காட்டி கொலைமிரட்டல் விடுத்த குற்றத்தை செய்துள்ளார். எனவே எதிரி பாலசுப்பிரமணி என்பவரது செய்கையானது சட்டப்பிரிவு 294(b), 379, 427, 506(ii) ஆவது இ.த.ச பிரிவுகளின் கீழ் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக தாந்தோணிமலை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய குற்ற எண். 326/2022ல் எதிரியின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி குற்றப்பத்திரிக்கை இந்நீதிமன்றக் கோப்பில் இவ்வழக்காக சி.சி.எண். 567/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2) மேற்படி எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், கு.வி.மு.ச. 207-ஆவது பிரிவுபடி எதிரிக்கு வழங்கப்படவேண்டிய அரசுதரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

3) எதிரி மீதான குற்ற சாராம்சம் குறித்து எடுத்துக்கூறி வினவியபோது எதிரி குற்றச்சாட்டை மறுத்து தான் குற்றவாளி இல்லை என்று கூறினார். இருதரப்பும் கேட்டும், இவ்வழக்காவணங்களை ஆராய்ந்தும், எதிரியின் மீது 294(b), 379, 427, 506(ii) ஆவது இ.த.ச பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டு வனைந்து வாசித்து, விளக்கிக் கூறி வினவிய போதும் எதிரி அக்குற்றச்சாட்டையும் மறுத்துள்ளார். எனவே, இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்காக உத்தரவிடப்பட்டு அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

4) இவ்வழக்கில் அரசுதரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.3 வரை குறியீடு செய்யப்படுகின்றன.

**<u>5) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :-</u>**

i) இவ்வழக்கில் அ.சா.1, தனது சாட்சியத்தில், “நான் தாந்தோணி கிழக்கு தெருவில் குடியிருந்து இல்லத்தரசியாக உள்ளேன். எனது கணவர் வழக்கறிஞராகவும், கரூர் வழக்கறிஞர் சங்கத்தின் தலைவராகவும், தமிழ்நாடு பார் கவுன்சில் உறுப்பினராகவும் உள்ளார். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது. **அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1**. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என சாட்சியமளித்துள்ளார்.

ii) இவ்வழக்கில் அ.சா.2, தனது சாட்சியத்தில், “நான் தற்போது தாந்தோணிமலை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்களது காவல்நிலையத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் தமிழ்செல்வன் அவர்களுடன் பணிபுரிந்து வகையில் அவருடைய கையெழுத்து எழுத்து நடை நன்கு பரிட்சயம்

என்பதால் வழக்கு கோப்பினைப் பார்வையிட்டு அவருக்காக கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 29.07.2022ம் தேதி 13.00 மணிக்கு மஞ்சு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று உதவி ஆய்வாளர் தமிழ்செல்வன் என்பவர் வெங்கமேடு காவல்நிலைய குற்ற எண்.326/2022, ச/பி 294(b), 379, 427, 506(ii) இதசவின் படி வழக்கு பதிவு செய்துள்ளார். மஞ்சு கொடுத்த **அந்த புகார் அ.சா.ஆ.2** மற்றும் **அந்த முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.3.** பின்னர் வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றையதினமே காலை 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜுவானந்தம், தர்மலிங்கம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் முறையே அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5.** பின்னர் மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தில் கிடந்த உடைந்த டும் லைட்டை கைப்பற்றுதல்மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார். **அந்த கைப்பற்றுதல்மகசர் அ.சா.ஆ.6**. பின்னர் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவம் உண்மையென தெரிய வந்ததன்பேரில் 29.07.2022ம் தேதி 11.45 மணியளவில் கரூர் காவல்நிலையம் பிள்ளையார் கோவில் முன்பு நின்று கொண்டிருந்த ஆஜர் எதிரியை காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் பெரியசாமி, ஏகாம்பரம் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். ஒப்புதல்வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான தாங்கள் என்னுடன் வந்தால் மாரப்பன் வீட்டில் டும் லைட்டுகளை திருடிக்கொண்டு காரில் ஏற்றி சென்ற அந்த காரை அடையாளம் காட்டி அதிலிருக்கும் டும் லைட்டுகளையும் எடுத்து ஆஜர் செய்கிறேன். **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.7**. **கைப்பற்றுதல்மகசர் அ.சா.ஆ.8.** பின்னர் எதிரியை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் வழக்குச் சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.9**. **அந்த உடைந்த டும் லைட் அ.சா.பொ.1. அந்த அருவாள் அ.சா.பொ.2. அந்த LED பல்பு அ.சா.பொ.3.** இத்துடன் உதவி ஆய்வாளர் தமிழ்செல்வன் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்" என சாட்சியமளித்துள்ளார்.இத்துடன் அரசுதரப்பு சாட்சி விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

6) அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்குப் பாதகமான சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச. 313(1)(ஆ)-ஆவது பிரிவின்படி எடுத்துக்கூறி

வினவியபோது எதிரி அவற்றை பொய்சாட்சி, பொய் வழக்கு என்றார். எதிரி தன்னுடைய தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எவரும் இல்லை என்றார். இத்துடன் எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது.

7) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் முன் வைக்கப்பட்ட வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரியின் மீது ச/பி 294(**b**), 379, 427, 506(**ii**) இதச பிரிவுகளின் கீழ் சாட்டப்பட்ட குற்றச்சாட்டை அரசுதரப்பால் தகுந்த முறையான ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

**<u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>**

9) அரசு தரப்பில், கடந்த 29.07.2022ம் தேதி அதிகாலை சுமார் 01.30 மணிக்கு இவ்வழக்கின் புகார்தாரர் மஞ்சு என்பவரது வீட்டிற்கு வெளியே இவ்வழக்கின் எதிரி பாலசுப்பிரமணி என்பவர் **TN** 47 **AQ** 0472 என்ற பதிவெண் கொண்ட **HYUNDAI VERNA** வெள்ளைநிற காரில் வந்து காரை நிறுத்திவிட்டு இறங்கி காருக்குள் இருந்து அருவாளை எடுத்து வீட்டின் காம்பவுண்ட் சுவரில் பொருத்தப்பட்டுள்ள சுமார் ரூ.12,000/- மதிப்புள்ள 3 டும் லைட்டுகளை அருவாளால் அடித்து உடைத்து திருடி காருக்குள் வைத்துக்கொண்டு புறப்பட்டபோது அதைப் பார்த்த சாட்சிகளான சாந்தி மற்றும் ரவிக்குமார் ஆகியோர் வந்து இருவரும் காரை குறுக்கே நின்று தேக்கிய பொழுது எதிரி பாலசுப்பிரமணி காரின் ஜன்னலை இறக்கி அருவாளைக் காட்டி வழி விடாவிட்டால் காரை ஏற்றி கொன்றுவிடுவதாக கொலைமிரட்டல் செய்தும், வக்கீல் மாரப்பன் பார்கவுன்சில் மெம்பர் என்றால் பெரிய ஆளா என்றும் புண்டமகனே, என்னைக்கா இருந்தாலும் அவனை வெட்டிக் கொல்லாமல் விடமாட்டேன் என்று அருவாளைக் காட்டி கொலைமிரட்டல் விடுத்த குற்றத்தை செய்துள்ளார். எனவே எதிரி பாலசுப்பிரமணி என்பவரது செய்கையானது சட்டப்பிரிவு 294(**b**), 379, 427, 506(**ii**) ஆவது இ.த.ச பிரிவுகளின் கீழ் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக தாந்தோணிமலை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய குற்ற எண். 326/2022ல் எதிரியின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றத்தினை நிரூபிக்கும் முகமாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் மற்றும் இருதரப்பு வாதங்களையும்

பின்வருமாறு பரிசீலிக்கப்பட்டது.

10) இவ்வழக்கின் பாதிக்கப்பட்டவரும் நிகழ்வுநிலை புகார்தாரருமான அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில், “நான் தாந்தோணி கிழக்கு தெருவில் குடியிருந்து இல்லத்தரசியாக உள்ளேன். எனது கணவர் வழக்கறிஞராகவும், கரூர் வழக்கறிஞர் சங்கத்தின் தலைவராகவும், தமிழ்நாடு பார் கவுன்சில் உறுப்பினராகவும் உள்ளார். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என்று கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

11) மேற்படி அ.சா.1ன் சாட்சியத்தை ஆராய்கையில், மேற்படி அ.சா.1 சம்பவம் பற்றி தனக்கு நேரடியாக தெரியாது என்றும் தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி புகார்தாரரே சம்பவம் பற்றி தனக்கு நேரடியாக தெரியாது என்றும் தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையது என்று கூறியுள்ள நிலையில் உண்மையிலேயே புகாரில் கண்டுள்ள சங்கதிகள் உண்மைதானா என்பதும் எதிரி மேற்படி குற்றத்தைப் புரிந்தாரா என்பதிலும் பலத்த சந்தேகம் ஏற்படுகிறது.

12) மேலும், இவ்வழக்கின் பாதிக்கப்பட்டவரும், நிகழ்வுநிலை புகார்தாரருமான அ.சா.1, மஞ்சு பிறழ் சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் மற்ற சாட்சிகளை விசாரிப்பதில் பயனில்லை என்பதால் மற்ற சாட்சிகளை விசாரிப்பதிலிருந்து அரசு தரப்பில் விலக்கு செய்யப்பட்டுள்ளனர். மேலும் புலன் விசாரணை அதிகாரி சார்பாக அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட உதவி ஆய்வாளர் திருமதி. தில்லைக்கரசி, இவ்வழக்கு குறித்து புலன் விசாரணை செய்த ஆவணங்களின் அடிப்படையில் எதிரியின் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ள போதிலும், புகார்தாரரே சம்பவம் பற்றி தனக்கு நேரடியாக தெரியாது என்றும் தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளநிலையில், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரி குற்றவாளி என முடிவு செய்ய இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே,எதிரி மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என

முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13) முடிவில், மேற்படி அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரியின் மீது சாட்டப்பட்ட சட்டப்பிரிவுகள் 294(b), 379, 427, 506(ii) ஆவது இ.த.ச பிரிவுகளின் படியான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு கண்டு சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை கு.வி.மு.ச. 248(1)-ஆவது பிரிவின்படி **விடுதலை செய்து** இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

14) இவ்வழக்கில் வழக்குச் சொத்தாக குறியீடு செய்யப்பட்டுள்ள **ஆர்.பி.எண். 199/2022** ல் கண்டுள்ள TN 47 AQ 0472 என்ற எண்ணுள்ள HYUNDAI VERNA வெள்ளைநிற கார் ஒன்றை அதன் உரிமையாளர் இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றதை அவரே நிரந்தரமாக வைத்துக்கொள்ளவும் மற்றும் சுமார் ஒரு அடி நீளமுள்ள அருவாள்-1, உடைந்தநிலையில் உள்ள சிறிய LED பல்பு ஒன்று மற்றும் உடைந்தநிலையில் உள்ள டும்லைட் ஒன்று ஆகியவற்றினை மேல்முறையீட்டுக் காலக்கெடுவிற்குப் பின் உரிய முறையில் அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் வடிக்கப்பட்டு, பின்னர் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 09.03.2026 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

BARATH KUMAR
Digitally signed by BARATH KUMAR
Date: 2026.03.09 19:42:55 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

<u>அரசுதரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் :-</u>

| | |
|---|---|
| அ.சா.1 | மஞ்சு |
| அ.சா.2 | திருமதி. தில்லைக்கரசி, காவல் உதவி ஆய்வாளர் |

**<u>அரசுதரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்:-</u>**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் |
| அ.சா.ஆ.2 | புகார் |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.7 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.8 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.9 | படிவம்-91 |

**<u>அரசுதரப்பு சான்று பொருள்கள் :-</u>**

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | உடைந்த டும் லைட்-1 **(ஆர்.பி.எண். 199/2022)** |
| அ.சா.பொ.2 | அருவாள்-1 **(ஆர்.பி.எண். 199/2022)** |
| அ.சா.பொ.3 | உடைந்த LED பல்பு -1 **(ஆர்.பி.எண். 199/2022)** |

**<u>எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருள்கள் :-</u>**

**இல்லை**

BARATH KUMAR
Digitally signed by BARATH KUMAR
Date: 2026.03.09 19:43:10 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

| | | |
|---|---|---|
| 09.03.2026<br><br>**சிசி.எண். 567/2025**<br><br>எதிரி ஆஜர். இவ்வழக்கில் முன் வைக்கப் பட்ட வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.<br><br>தீர்ப்பு அவையறியப் பகரப்பட்டது.<br><br>முடிவில், மேற்படி அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரியின் மீது சாட்டப்பட்ட சட்டப்பிரிவுகள் 294(b), 379, 427, 506(ii) ஆவது இ.த.ச பிரிவுகளின் படியான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு கண்டு சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை கு.வி.மு.ச. 248(1)-ஆவது பிரிவின்படி **விடுதலை செய்து** இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>இவ்வழக்கில் வழக்குச் சொத்தாக குறியீடு செய்யப்பட்டுள்ள **ஆர்.பி.எண். 199/2022** ல் கண்டுள்ள TN 47 AQ 0472 என்ற எண்ணுள்ள HYUNDAI VERNA வெள்ளைநிற கார் ஒன்றை அதன் உரிமையாளர் இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றதை அவரே நிரந்தரமாக வைத்துக்கொள்ளவும் மற்றும் சுமார் ஒரு அடி நீளமுள்ள அருவாள்-1, உடைந்தநிலையில் உள்ள சிறிய LED பல்பு ஒன்று மற்றும் உடைந்தநிலையில் உள்ள டும்லைட் ஒன்று ஆகியவற்றினை மேல்முறையீட்டுக் காலக்கெடுவிற்குப் பின் உரிய முறையில் அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது.<br><br>BARATH KUMAR Digitally signed by BARATH KUMAR Date: 2026.03.09 19:43:21 +0530<br><br>**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்.** | | |

| | | |
|---|---|---|
| | | |